**முதல் கூடுதல் சார்பு நீதிமன்றம், ஈரோடு, ஈரோடு மாவட்டம்.**

அசல் வழக்கு எண்.228/2024      இ.ம.எண்.

எம்.சி.ஓ.பி.எண்.      நி.வே.ம.எண்.

2025ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 12–ம் தேதி வாதி தரப்பு சாட்சி வா.சா.1–ன் வாக்குமூலம் 1989ம்ஆண்டு 19வது விதி ஏற்பாட்டின்படி ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

(வாதி ஆஜர். பிரதிவாதி ஆஜர் இல்லை. வாதி மற்றும் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர்கள் ஆஜர்)

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : பிரபு | மாவட்டம் | : |
| த/பெ.பெயர் | : தங்கவேல் | தொழில் | : |
| கிராமம் | : | வயது | : |
| வட்டம் | : | | |

முதல் விசாரணை:

நான் இந்த வழக்கின் வாதி. நான் இந்த வழக்கில் என்னுடைய நிரூபண பிரமாண வாக்குமூலத்தை தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள விபரங்கள் தெரியும், அதிலுள்ள கையெழுத்து என்னுடையதாகும். எனது நிரூபண வாக்குமூலத்தை முதல் விசாரணையாக ஏற்று, அதில் குறிப்பிட்டு ஆவணங்களை முறையே கீழ்கண்டவாறு குறியீடு செய்து, வழக்குரையில் கோரியுள்ளவாறு பரிகாரம் வழங்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

1. 18.04.2024 பிரதிவாதி கொடுத்த ரூ.5,00,000/–க்கான கரூர் வைசியா வங்கி லிமிட் கொமாரபாளையம் கிளை காசோலை எண்.000103அசல் **வா.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

2. 19.04.2024 தேதியிலுள்ள வங்கி திருப்பட்ட குறிப்பாணை உண்மை நகல் **வா.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

3. 22.06.2024 வழக்கறிஞர் அறிவிப்பு அஞ்சலக ரசீது(எண்ணிக்கை 1 அசல்) **வா.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

4. 26.06.2024 திருப்பபட்ட அஞ்சலக கவர் மற்றும் ஒப்புதல் அட்டை அசல் **வா.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

5. 06.04.2022 தேதியில் ஏற்பட்ட பிரதிவாதி பெயரில் திவ்யா எழுதிக்கொடுத்த கிரய ஆவணம் இணையதள நகல் **வா.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

6. 25.06.2024 க்குரிய வில்லங்க சான்று இணையதள நகல் **வா.சா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

வா.சா.ஆ.1 ஆவணத்தை பிரதிவாதி தரப்பில் ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்படுகிறது.

தாவாபடி தீர்ப்பாக பிரார்த்திக்கிறேன்.

பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்குவிசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.